# நந்தி

மாலை 3 } திருவள்ளுவர் ஆண்டு 1999
ஆவணி—செப்டம்பர் 1966 { மணி 11

## மருந்து உற்பத்தியாளர்களே!
## விழித்துக் கொள்ளுங்கள்

நாட்டு மருந்துகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நேயர்களுக்கு பல இன்னல்கள் வந்துகொண்டிருக்கின்றன. (Drugs and cosmetics Act) மருந்துகள், வாசனைப் பொருள்கள் சட்டம் என்ற ஒரு கத்தியை பாரத அரசாங்கம் தயார் செய்தது. அக் கத்தியை மேலும் சாணை பிடித்து தீட்டுவதற்கு. ஒரு *திருத்த சட்டம்.* இதன் நகல் ஒன்று நாடு முழுதும் பரவலாக எல்லோருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆயுள் வேதத்திற்குள் அடங்கியது சித்த மருத்துவம். பாரத அரசாங்கம் புரிந்துகொண்ட வியாக்கியானம். நாம் எத்தனை தட்வை எடுத்துச் சொல்லியும், தமிழகத்திலுள்ள வைத்திய சங்கங்கள், மருந்து உற்பத்தியாளர் சங்கம், தமிழக அரசாங்கம், இவை அனைத்தும் தாக்கீதுகள் அனுப்பிய பின்னுங்கூட பாரத அரசாங்கம் பிடிவாதம் பிடிக்கிறது.

சித்த மருத்துவம் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஆயுள் வேதத்திற்குள் அடங்கியது என்று சொல்வதால் சித்த மருத்துவம் வளர்ச்சியடைய முடியவில்லை. பாரத அரசாங்கம் ஒதுக்கும நிதியின் பெரும் பகுதியை ஆயுள் வேதம் விழுங்கி விடுகிறது. எனவே சித்த மருத்துவம் சுதந்திரமான முறையில் வளர்க்கப்பட வேண்டும். இதுவே நம் இலட்சியம்.

நாட்டு மருத்துவ முறைகளைப் பற்றி, பாரத அரசாங்கம் வெளியிடும் தாக்கீதுகள், இயற்றும் சட்டங்கள், இவற்றில் ஆயுள் வேதம் சித்தா, யுனானி என்று தனித்தனியாக குறிப்பிடவேண்டும். இந்தக் கொள்கையை

பாரத அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் வரை, நாம் போராட வேண்டி யிருக்கும்.

அடுத்தபடியாக, பாரத அரசினர், கொண்டுவர உத்தேசித்திருக்கும கட்டுப்பாடு சட்டத் திருத்த விதிகளில் பல, மருந்து உற்பத்தித் தொழிலை பெருமளவில் பாதிக்கக்கூடியது. முதலில், சட்ட மியற்றுவதற்கு முன், பாதிக்கப்படுபவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளாமல், சட்ட மியற்றி விட்டனர். இப்பொழுது சில விதிகளைத் திருத்துவதற்கு யோசனை கேட்கிறார்கள்.

இந்த திருத்த விதிகளை நாம் ஆட்சேபிக்கிறோம். நாட்டு மருந்து களின் தரத்தை நிர்ணயிக்க, எல்லா வசதிகளுமுள்ள ரசாயன சாலைகள் (Laboratory) எல்லா மாநிலங்களிலும் இல்லை. குறிப்பாக சித்த மருந்துகள், இரதம், கந்தகம், பாடாணம், உப்பு சரக்குகள், உலோ கங்கள் இவைகளிலிருந்து தயாரிக்கப்படுபவை. பத்துவித செந்தூரங்கள் அல்லது பத்துவித பற்பங்கள், வெவ்வேறு சீசாக்களில் நிறப்பப்பட்டு, மேலே சீட்டுகள் ஒட்டப்படாமல் வைக்கப்பட்டால் எந்த ஆராய்ச்சி யாளராலும் அவற்றின் வேற்றுமைகளை அறிந்து சொல்ல முடியாது. செந்தூரங்கள், பற்பங்கள் பார்வைக்கு எல்லாம் ஒரே மா ரியாகத்தான் காணப்படும். பற்பம், செந்தூரம் முதலியவை தயாரிப்பதில், நூல்களில் சொல்லப்பட்டுள்ள பொதுவான செய்முறைகளிருந்தாலும், உற்பத்தி யாளர்களில் பலர், தங்கள் பரம்பரை வழியாக கைவந்துள்ள சில முறை களைக் கையாண்டு வருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட செய்முறையைத் தான் பின்பற்ற வேண்டுமென்று வகுத்துக் கூறக்கூடிய மருந்து செய் முறை அட்டவணையை, பட்டியலை (Pharmacopoeia) ஆயுள் வேத, சித்த, யுனானி மருந்துகள் விஷயத்தில் பாரத அரசாங்கமோ, மாநில அரசாங்கங்களோ இன்னும் நிர்ணயிக்க வில்லை.

இந்த சூழ்நிலையில், நாட்டு மருந்துகளின் தரத்தை பரிசீலிப்பது, கட்டுப்படுத்துவது, மருந்து உற்பத்திசாலைகளைப் பார்வையிடுவது போன்ற பணிகளுக்காக மருந்து ஆய்வாளர்களை நியமிப்பது, விதிகள், சட்டங்கள் ஏற்படுத்துவதென்பது நிதானிக்கவேண்டிய விஷயமாகும். எனவே, மருந்து செய்முறை அட்டவணை (Pharamacopeia) வெளி யிடப்படும்வரை, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தையும், அதன் விதிகளில் சிலவற்றைத் திருத்தும் யோசனையையும் ஒத்திவைக்க வேண்டு மென்று பாரத அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். இம் மாதம் 10-ம் தேதி (10-9-1966) அன்று தமிழ் நாடு, ஆயுர் வேத, சித்த

பழனி மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம், பழனியம்பதியில், சித்த வைத்தியக் களஞ்சியம் உயர்திரு. ஆர். எம். கே. சிவசுப்ரமணியரும் அவர்களுடைய இராஜமாளிகையில் கூடவிருப்பதாக அறிகிறோம்.

தமிழகத்தில், புகழ்பெற்ற சித்த மருந்து உற்பத்தி நிலையங்கள் பல பழனியில்தானிருக்கின்றன. எனவே சங்கக் கூட்டம் பழனியில் நடக்க விருப்பது வரவேற்கத்தக்கது. தமிழகத்திலுள்ள நாட்டு மருந்து உற்பத்தி யாளர்களில் பெரும்பாலோர், கட்டுப்பாடுச் சட்டம் ஒரு கூர்மையான வாள் என்பதை உணராமல் அசிரத்தையாக இருந்து வருகிறார்களென்றே நாம் நினைக்கிறோம் இனியும் அம்மாதிரி யிருக்காது, பழனியில் கூடும் கூட்டத்தில் ஒருமனதான எதிர்ப்பை உருவாக்கி, ஒன்றுபட்டு செயல் படுவார்களென்று நம்புகிறோம்.

---

# முக்கிய அறிவிப்பு

*இப்பொழுது உங்கள் கையிலிருப்பது "நந்தி"யின் மாலை 3, மணி 11. அடுத்த மாத இதழுடன் "நந்தி'க்கு மூன்று ஆண்டு கள் நிறைந்து, நான்காவது ஆண்டு பிறக்கிறது. எவ்வித பொரு ளாதார வசதியும், போதிய ஆதரவும் இல்லாத ஒரு நிலையில், மூன்று ஆண்டுகளாக வெற்றிகரமாக "நந்தி" பணியாற்றி வந் திருப்பதற்கு, இறைவன் திருவருள் ஒன்றே காரணமாகும்.*

*சந்தா நேயர்கள், நான்காவது ஆண்டு சந்தா ரூ. 5/-ஐ, தாமத மின்றி அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறோம்.*

*புதிதாக சேர விரும்பும் சந்தா நேயர்கள், நான்காவது ஆண்டு சந்தாவுடன் ரூ. 2-50 பைசா சேர்த்து ரூ. 7-50 ஆக மணி யார்டர் அனுப்பினால், மூன்றாவது ஆண்டிற்குரிய 12 இதழ்களும் அனுப்பி வைக்கப்படும். இந்த சலுகையைப் பயன்படுத்திக் கொள் வார்கள் என்று நம்புகிறோம்.*

*எல்லா மணியார்டர்களும் நிர்வாகி "நந்தி", 9. கஜபதி நாயுடு தெரு, செனாய் நகர், சென்னை 30 என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்பவேண்டும்.*

# சித்த மருந்து செய் முறைகள்

## கத்தூரிக் கருப்பு

**சரக்குகள்:**

| | | | |
|---|---|---|---|
| கத்தூரி | 1 பங்கு | பூரம் | 5 பங்கு |
| பச்சைக் கற்பூரம் | 5 பங்கு | இரச செந்தூரம் | 5 பங்கு |
| கோரோசனை | 5 பங்கு | தாளகம் | 5 பங்கு |
| குங்குமப்பூ | 5 பங்கு | மனோசிலை | 5 பங்கு |
| இரசம் | 5 பங்கு | | |
| கந்தகம் | 5 பங்கு | திப்பிலி | 7 பங்கு |
| இலிங்கம் | 5 பங்கு | ஓமம் | 7 பங்கு |

**செய்முறை:**—முதல் சொன்ன நான்கு சரக்குகளைத்தவிர மற்றைய சரக்குகளை ஒவ்வொன்ருக கல்வத்திட்டு அரைத்து ஒன்று பட நுண்ணிய பொடியாகச் செய்து கருமை நிறம் வந்ததும் முதல் நான்கு சரக்குகளைச் சேர்த்து நன்ருக ஒன்று சேர அரைத்து பொடியை எடுத்துக்கொள்ளவும்.

**அளவு:**—30 mgm to 120 mgm.

**அனுபானம்:**—தேன்; வெற்றிலைச்சாறு,

**தீரும் நோய்கள்:**—இருமல்; இறைப்பு; கயம் ஆகிய கப நோய்கள் குரற் கம்மல்; மற்றும் சில வாத நோய்கள் தீரும்.

## அயவீர செந்தூரம்

**சரக்குகள்:**—அயப்பொடி, இரசம், வீரம், நவாச்சாரம்.

**செய்முறை:**—எல்லாச் சரக்குகளையும் சம எடைகளாக நிறுத்துக் கல்வத்திட்டு நன்ருக மூன்றுநாள் அரைக்கவும். புதிய வாயகன்ற மட் சட்டியில் யிட்டு அடுப்பில் ஏற்றி வறுக்கவும். வறுக்கும் தறுவாயில் பொடி செந்நிறமாகும் வரையில் கிளறி கொடுக்கவேண்டும்.

**அளவு:**—30 mgm to 120 mgm. **அனுபானம்:**—தேன்.

**தீரும் நோய்கள்:**—சந்துவாதம்; பக்கவாதம்; வாதக் குடைச்சல்; சிற்சில வாதநோய்கள் தீரும்.

## தங்க உரம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கந்தகம் 1 பலம் | வெள் வங்கம் 1 பலம் |
| இரசம் ,, | நவாச்சாரம் ,, |

**செய்முறை:**—வங்கத்தை உருக்கி கல்வத்தில் ஊற்றவும். உடனே இரசத்தை அதனுடன் கல்வத்திட்டு அரைக்கவும். பிறகு மற்ற சரக்குகளை இட்டு வெடியுப்பு திராவகத்திஞல் அரைக்கவும்.

நன்ருக பொடித்த பிறகு ஒரு வாய் அகன்ற மட் சட்டியில் இட்டு மற்ெருரு அம்மாதிரியான சட்டியின் மத்தியில் துவாரம் செய்து மூடவும், அடுப்பில் ஆறுமணி நேரம் எரிக்கவும்.

அளவு: 65 mgm முதல் 120 mgm வரை கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்:—வெள்ளை, வெட்டை, கிேல்வாயு, நரம்பு தளர்ச்சி.

அனுபானம்:—தேன் அல்லது ஜாதிக்காய் லேகியம்.

## சிவனுர் அமுதம்

### சேரும் சரக்குகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இருவி | பலம் 1 | 6. | மனேசிலை | பலம் 1 |
| 2. | ரசம் | ,, | 7. | வெங்காரம் | ,, |
| 3. | வெண்ணுவி | ,, | 8. | மாகதி(அரிசிதிப்பிலி) | ,, |
| 4. | கெந்தகம் | ,, | 9. | மிளகு 8 பலம் | |
| 5. | சுக்கு | ,, | | | |

### செய்முறை

1. இருவியையும் வெண்ணுவியையும் பசும்பாலில் வேக வைத்து கழுவி காயவைத்து இடித்து பொடி செய்துகொள்ளவும்.

2. சுக்கு, அரிசிதிப்பிலி, மிளகு மூன்றையும் தனியே பொடி செய்து சலித்து எடுத்துக்கொள்ளவும்.

3. கல்வத்தில் ரசத்தைவிட்டு கெந்தகத்தையும் அதனுடன் போட்டு அரைத்து ரசம் மடிந்து தூளானபிறகு மனேசிலை வெங்காரத்தையும் அதனுடன் போட்டு அரைத்து பொடி செய்துக் கொண்டு மற்ற பொடிகளையும் அதனுடன் கலந்து அறைத்தெடுத்துக்கொள்ளவும். எல்லாத் தூள்களையும் ஒன்ருக கலந்து ஒரே சமயத்தில் நன்ருய் கருநிறம் ஆகும்வரையில் அறைக்க முடியாதாகையால் அதை எல்லாம் வேெருரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக்கொண்டு கலவத்தில் கொஞ்சம் கொஞ்சமாக போட்டு கருநிறமாகி நன்ருய்ப் பொடியாகிற வரையில் அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

அளவு:—பொதுவாக தேனில் 300 mgm காலை மாலை இரு வேளை கொடுக்கவும்.

### தீரும் நோய்கள்

1. வலிப்பு நோயால் பட்டி மயங்கிக கிடக்கும்போதும்

2. பாம்பு கடித்து விஷம் தலைக்கேறி பல்கிட்டி கண் சொருகி கால் கை உடம்பு சில்லிட்டு, மாரடைத்துக் கொள்ளும்போதும் மூக்குத் துளையில் விட்டு இரண்டு மூக்கிலும் மாறி மாறி ஊதி உள் செலுத்தவேண்டும். உள் சென்றவுடன் மூச்சுவரும், வாய் திறக்கும்.

3. அரணை, தேள்கடி முதலியவைகளுக்கு மூன்று நேரம் தேனில் கொடுக்கவும்.

4. சன்னிபாத நோயில் தக்க அனுபானத்தில் கொடுக்கலாம்.

5. தோல் வியாதிகளில் தக்க அனுபானங்களில் கொடுக்க தீரும். நோய்க்குத் தக்கவாறு உணவு கொடுக்கவேண்டும்.


# உங்கள் கவனத்திற்கு

மக்கள் நோயின்றி வாழ, நோய் வந்த பின் சுகமடைய, இலகுவான சிகிச்சை முறைகள்

தொடர்பு கொள்க :—

சித்த வைத்தியர் எஸ். அம்பி

ஸ்ரீ ல ஸ்ரீ சுந்தரானந்தர்

சித்த வைத்தியசாலை

ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

# சித்தமருந்து வரலாறு

(டாக்டர். பு. மு வேணுகோபால் H. P. I M.)

(முன் தொடர்ச்சி)

## கடைச் சங்கம்

இடைச்சங்கம் கபாடபுரத்தில் கி. மு. 760 வரை இருந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் சுமார் கி மு. 760ல் அசிரியாவில் கோள்களின் விகற்பங்களால் பெருமாரி பெய்து கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு நகரமெல்லாம் அழிந்தது என்று கூறப்பட்டுள்ளது. அன்றியும் அதேகாலத்தில் (கி. மு. 763) சீன நாட்டில் சூரிய கிரணம் தோன்றியதால் உலகம் முழுவதிலுமே அழிவு ஏற்படும் என்றும் சீன ஏடுகள் குறிப்பிடுகின்றன. அதே காலத்தில் குமரிக்கண்டத்தில் கடல் கோட்கள் உண்டானதாக சங்க நூற்களில் ஒன்ருகிய பரிபாடலில் கூறப்பட்டதுமல்லாமல் குமரிக்கண்டம் மூழ்கியதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஈதன்றியும் 'மகாவம்சோ'' என்ற பௌத்த நூலில் கி. மு. 500 லும் கி. மு. 304 லும் கடல் பொங்கி, தற்கால இலங்கைக்குத் தெற்கேயுள்ள நாகநாடும் அதற்கு மேற்கேயுள்ள குமரிநாடும் மூழ்கிவிட்டதாக எழுதப்பட்டுள்ளது. இதனையே "டெனற்'' இலங்கை சரித்திரமும் வலியுறுத்துகிறது. ஆராயுமிடத்து சுமார் 760ல் கபாடபுரம் அழியவே இடைச்சங்ககாலத்து தமிழர்களும் அங்கு குடியேறிய வியந்திரங்களும் (வடதமிழர்) நாலா பக்கமும் சிதறிப் பரவினர். பெரும்பாலோர் முக்கியமாக பாண்டிய நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இதற்கு முன்பே குடியேறிய வியந்தரர்கள் பாண்டிய நாட்டின் மலைகளிலும் குகைகளிலும் பரவி தங்கள் குடிகளைப் பரப்பியிருந்தார்கள். குமரிக்கண்டத்திலிருந்து வந்த பண்டைய தமிழர்கள் மேற்சொன்ன வியந்தரர்களோடு கூடி பாண்டிய நாட்டில் முக்கூடல் என்ற இடத்தில் நகரமைத்து அரசுபுரிந்தார்கள். இக்காலம் வட்டெழுத்துக்காலமாகும்.

இனி, கடைச் சங்கத்தின் வரலாற்றைக் கூறுவதற்கு சங்க நூற்கள் பெரிதும் உதவுகின்றன. தமிழ்ச் சங்கங்களைப்பற்றி விவரிக்கின்ற காலத்து தமிழ்ச் சங்கங்கள் இருந்தனவா என்ற ஐயமும் கேள்வியும் எழுந்தன. சங்கங்கள் இருந்தன என விளக்க சங்ககால நூற்களிலிருந்து ஆதாரங்கள் எடுக்கப்பட்டன. விரிவுரை யாசிரியர்களின் கோட்பாடுகளும் இதற்கு உதவுகின்றன. இவைகளன்றி புறச்சான்றுகளும் ஆதாரமாகின்றன. முக்கியமாக ''பெரிப்பிளசு'' என்ற பூலோகநூல் "டாமி' என்பவரால் எழுதப்பட்டதிலிருந்தும், "பிளினி'' என்பவர் எழுதிய நூலிலிருந்தும் தமிழகத்தைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இன்னும் இலங்கையில் வெளியான "மகாவம்சோ''. "இராசாவளி''. ''இராச இரத்தினகரி'' போன்ற பௌத்த வரலாற்று நூற்களிலும் தமிழகம்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இறுதியாக

வடமொழி நூற்களும் பெரிதும் உதவியான சான்றுகளாக உதவு கின்றன.

சங்கத்தைப்பற்றிக் குறிப்பிடுபவர்களில் அனேகர் திருவிளை யாடற் புராணத்தை ஆதாரமாகக் கையாளுகின்றனர். திருவிளை யாடற் புராணத்தை 10வது நூற்றுண்டில் பெரும்பற்ற புலியூர் நம்பி என்பாரும், 16வது நூற்றுண்டில் பரஞ்சோதி முனிவரும் பாடியுள்ளனர். இதுவே வடமொழியில் ஆலாசிய மகாத்மியம் என்ற நூலாக விளங்குகிறது. அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் "நான்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனக கிழிதருமிக் கருளி னேன்காண்" என்பதாலும் திருஞான சம்பந்தர் தேவாரத்திலும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியிலும் திரு ஆண்டாள் திருப்பாவையிலும் சங்கத் தமிழ் என்று பாடல்களில் காண்பதா லும் சங்கம்பற்றிய குறிப்புகளை அறியலாம். சங்கங்களைப்பற்றி கம்பன் சடகோப அந்தாதியிலும் சேக்கிழார் பெரிய புராணத்தி லும் ஒட்டக்கூத்தர் தக்கையாபரணியிலும் எடுத்துரைத் திருக்கின் றனர். இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் வுரையிலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு நச்சினார்க்கினியர் உரை யிலும் பேராசிரியர் 649-ம் சுத்திர அரும்பத உரையிலும் அடி யார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையிலும் தமிழ்ச் சங்கங்களை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கடற்கோளினுல் குமரிக்கண்டம் மூழ்கினதை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் எடுத்துக்காட்டி யுள்ளார். இராமாயணத்தில் சீதையைத் தேடுகின்ற காலத்தில் சுக்கிரீவனுக்கு பாண்டியனுடைய கபாடபுரத்தைக் குறிக்கோ ளாகக் காட்டி அனுமானுக்கு வழிகாட்டினதை வான்மீகி தன் காப்பியத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். கௌதில்யர் அர்த்தசாத் திரத்தில் முத்துக்களைப்பற்றிப் பேசும்போது பாண்டியன் கபாட புர முத்துக்கள் உயர்ந்தது என்று கூறியுள்ளார். ஆகவே மேற் சொன்ன அகப்புறச் சான்றுகளைக்கொண்டு தமிழ்ச்சங்கம் இருந் தது என்று நிறுவலாம். ஆனுல் சங்கம் என்ற சொல்லால் வழங்கி இருக்கமுடியாத காரணத்தால் மன்றம், குழு, அவை என்ற சொற்களால் வழங்கி இருக்கலாமென்பது ஆய்வாளர் முடிவு. பண்டைய காலத்து புலவர்களின் அவையை பிற்கால புலவர்கள் காலப்போக்கில் சங்கம் என்று பெயரிட்டழைத்தனர்போலும். சங்கம் எனினும் அவை எனினும் ஒன்றே. மொழிப் பிரச்சினையை விட்டு கடைச்சங்க வரலாற்றைக் கூறுவாம்.

சிந்து கங்கை இடைவெளி தீரத்தில் குடியேறிய வட திரா விடர்களை ஆரியர்கள் ஆரிய வர்த்தகத்தை நிறுவுகின்ற காலத்தில் நாகேந்திரன் (நாகர்கோன்) போக நாட்டை (பக்தநாடு, கீகடநாடு) அரசாண்டுகொண்டிருந்தான். விச்சுவன் என்னும் அவுணன் வலுவில் படையெடுக்கவே அவனைப் போரில் கொன்றுன். தன் தந்தையைக் கொன்ற நாகேந்திரனை எவ்வகையாயினும் பழிவாங்க துவட்டன் என்னும் பெயருடைய விருத்திரன் முன்வந்தான்.

நாகேந்திரன் அவனை எதிர்க்க வலுவில்லாமற் போகவே ததீச முனிவரின் முதுகெலும்பை வச்சிராயுதமாகப் பெற்றான். பலம் பெற்ற நாகேந்திரன் அவுணர் மகனைப் போருக்கு வளைத்தான், போரில் அவுணர் தலைவன் தோல்வியுற்று கடலில் மறைந்தான். நாகேந்திரன் பிரம்மனிடம் (பிரம்மன் என்பவன் ஒரு அனுபூதி மான் என்றறிக) முறையிடவே கடல்நீரை வற்றச்செய்தால் விருத் திரன் காணப்படுவான் எனவும் அக் கடல்நீரை வற்றச்செய்ய அகத்தியர் ஒருவரால்தான் முடியும் எனவும் பிரம்மன் கூறினார். உடனே நாகேந்திரன் அகத்தியர்பால் சென்று அவ்வாறு வேண் டவே அகத்தியரும் கடல்நீரை வற்றச் செய்தார். கடல்நீர் வற் றவே அவுணர் தலைவன் நாகேந்திரன் முன் எதிர்ப்பட வச்சிராயுதத் தான் கொல்லப்பட்டான். அதனால் நாகேந்திரனுக்கு பிரம்மகத்தி ஏற்பட்டது. இப் பழியைத் தீர்க்க குருபகவான் உபதேசப்படி தெற்கு நோக்கிப் புறப்பட்டான்.

தென்னகம் போந்து கடம்பவனத்தை அடைந்ததும் தான் தாங்கிய சுமையை இறக்கினவன் போன்று நாகேந்திரன் அளவில் லாத மகிழ்ச்சியுற்றான். கடம்பவனத்தில் வானரக் குடிகள் சிவலிங் கத்திற்கு பூசை செய்துகொண்டிருப்பதையும் கண்டான். இதனைத் திருவிளையாடற் புராணத்தில்.

"அருவாகி யுருவாகி யருவுருவங்
கடந்துண்மை யறிவா னந்த
உருவாகி யளவற்ற வுயிராகி
யவ்வுயிர்க் கோர்வுணர்வாய் பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்
தன்னிடை யுதித்த மடங்கரின்
கருவாகி முளைத்தசிவக் கொழுந்தையா
யிரங்கண்ணுங் களிப்பக் கண்டான்"

எனக் கூறப்பட்டுள்ளது.

அருகிலிருந்த தாமரைத் தடாகத்தில் நீராடி, சிவலிங்கத்தை தாமரை மலரால் அர்ச்சித்து வழிபாடு செய்து வருவானாயினன். இவ்வாறாக ஆரியவர்த்தத்திலிருந்து புறப்பட்டுவந்த வட திராவிடர் களாகிய வியந்திரர்கள் முதலில் கபாடபுரம் வரையில் சென் றடைந்து குடிபுகுந்தார்கள். அலையலையாக வட திராவிடர்கள் இடைச்சங்க கால இறுதிவரையில் வந்துகொண்டே யிருந்தார்கள். சிலர் முக்கூடலிலேயே தங்கிவிட்டனர். இதற்குள் கபாடபுரம் கடற்கோளினால் மூழ்கவே பாண்டியன் முடத்திருமாறன் கடம்ப வனத்தின் கீழ்பாகத்தில் மணலூரில் அரசை நிறுவினான். இவ னுக்குப் பிறகு வழிவழியாம் வந்த பாண்டியன் குலசேகரன் அரசாண்டாள். குலசேகரன் அரசுபுரிகின்ற காலத்தில் அவ்வூர்

தனஞ்செயன் என்ற வாலிபன் கடம்பவன சிவலிங்கத்தைத் தரிசித்துவந்து பாண்டியனிடம் கூறினன். பாண்டியனும் அத்திசை நோக்கி வணங்கினன். அன்றிரவு பாண்டியன் கனவில் ஒரு சித்தர் தோன்றி கடப்பவனத்தை அழித்து ஒரு அழகிய நகரமுண்டாக்குக என்று அறிவித்து மறைந்தார். கனவினின்று விழித்த பாண்டியன் இதை அமைச்சருக்குக் கூறினன். பின் மணவூரிலிருந்து புறப்பட்டு மேற்றிசைக்கண் சென்று கடம்பவனத்தை அடைந்ததும் அங்கு எழுந்தருளியுள்ள சோமசுந்தர சிவலிங்கத்தை தரிசித்தான். பிறகு சிவலிங்க மூர்த்தியான சுந்தரர் முன்கனவில் தோன்றிய சித்தர்போல் தோன்றி இங்கு ஓர் கோவில் உண்டாக்குவாய் என்று கூறி மறைந்தார். அவ்வண்ணமே பாண்டியன் குலசேகரன் செய்துமுடித்தான். அந்த ஆலயம் எழுந்தருளிய திருநகருக்கு வடகீழ் திசையில் தனக்கு மாளிகையை அமைத்து அந்நகருக்கு சாந்தி செய்தான். அத்திருநகர் மதுராபுரி எனவழங்கப்பட்டது. மற்றும் சித்தாந்த வழியில் ஒழுகாநின்ற ஆதி சைவர்களும் காசியம் பதியினின்று வந்த சைவர்களும் ஆகம விதிப்படி ஆலயப் பூசையை நிறுவினர்.

குலசேகர பாண்டியன் தன் மகன் மலையத்துவிசன் என்பானுக்கு அரசுபாரத்தை சுமத்தி இன்ப அருள் நிழல் எய்தினன். மலையத்துவச பாண்டியன் வடமொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் நிலைகண்டு கடந்தவன் சூரியன் மரபில் தோன்றி அறத்தின் வழி ஒழுகும் சூரசேனன் மகன் காஞ்சனமாலையை மணம் செய்தான். இவனும் சோமசுந்தரக் கடவுளை வணங்கலுற்ருன். அனேக காலம் மகப்பேறில்லாமையாய் அதற்காக வேள்வி செய்ய அதன் விளைவாய் தடாதகைப்பிராட்டியார் அயோனியாய் அவதரித்தார் எனக் கூறப்பட்டுள்ளது. மலையத்துவச பாண்டியன் தடாதகைப் பிராட்டியாருக்கு நிலவுலகத்தை ஈந்து வானுலகம் அடைந்தான்.

மதுரை நகரை தடாதகைப்பிராட்டியார் தந்தைக்குப் பிறகு மிகவும் சிறப்பாக அரசாண்டார். கன்னியாகிய தடாதகைப் பிராட்டியார் பாண்டியநாட்டை ஆண்டதினுல் "கன்னிநாடு" என்றும் பெயருண்டு என்பது உணரற்பாலது. இவ்வாருக அரசு புரிகின்ற காலத்தில் கயிலையினின்று போந்த சோமசுந்திரர் தடாதகைப்பிராட்டியாரை மணந்தார். சோமசுந்திரனுக்குப் பாண்டி நாட்டை ஆளும் உறின் கிடைத்தமையால் சோமசுந்திர பாண்டியன் என்ற பெயர் பெற்ருர். அக்காலங்களில் மன்னர்களும் மாபெரும் சித்தர்களாக விளங்கினர். அவ்வகைத்தானவர்களில் சோமன் சுந்திரர் போன்ற சித்தர்களும் ஆவர். இப் பெயர்கொண்ட சித்தர்களை திருமூலர் திருமந்திரம் 3000-த்தில்

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன்

*கந்துரு, காலாங்கி, கஞ்ச மலையனோடு*
*இந்த எழுவரும் என் வழியாமே"*
*"தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்*
*சுந்தரன் ஆகமச் சொன்மொழிந்தானே"*

*என்ற பாக்களினால் கூறியிருக்கிறார். எனவே சோமசுந்திரர் காலம் திருமூலர் முதல் தரம் தென்னகம் வந்த கால மெனலாம்.*


# ஓர் அறிவிப்பு?

வைத்தியர்கள் - டாக்டர்கள் - கம்பவுண்டர்கள் - ஹோமியோபதி வைத்திய சாலைகள் - மருந்துக் கடைகள் — ஜெனரல் மெர்ச்சண்டு & மளிகை கடைகளுக்கும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மிகச் சிறந்த

## மூன்று வகையான பேதி மருந்துகள்!

**மாதிரி சாம்பிள் இலவசம்!**

1 ரத்னு சுகபேதி அல்வா *(இனிப்புள்ளது)*
2 S. V. R. சுகபேதி எண்ணை *(காப்பியில் சாப்பிட)*
3 S. V R. சுகபேதி மாத்திரை *(சக்கரையில் சாப்பிட)*

*விற்பனையாளர்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் சப்ளை செய்யப்படும்.*

—— தேவைக்கு எழுதவும் ——

*தயாரிப்பாளர்:* சித்த வைத்திய பண்டிட்

## S.V.R. கண்டர் சன்ஸ் R.I.M.P.

"இராஜ சித்த வைத்தியசாலை"

அரிசிப்பாளையம் :: சேலம்-9.

**N. B:—***மற்றும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளின் கேட்லாக் இலவசம்.*

# நோயாளியின் பரிசோதனை

(டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.
பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி முதல்வர்)

## நோயாளியின் தோற்ற நிலை

(முன் இதழ் தொடர்ச்சி)

சிலருக்கு நரம்பு வியாதியில் கை விரல்கள் உள் மடங்கி பறவை பாதம்போல் காணும். உள்ளங்கையின் தசைகள் சூம்பினதினால் தட்டையாகவும் சுருங்கியும் காணும். இவ்விதமாக அநேக நோய்களில் கைகளைக்கொண்டே இன்ன நோயினால் பீடிக்கப்பட்டிருப்பான் என்பது விளங்கும்.

**சுவாசம்:**—சுவாச உறுப்புகளில் அடைப்பு இருந்தால் சப்தத்தோடு சுவாசம் நடக்கும். மூக்கில் அடைப்பு யிருந்தால் "கொத கொத" என்ற கொந்தளிப்பு சப்தம் கேட்கும். வாய் நரம்புகளினால் பாதிக்கப்பட்டிருந்தால் குறட்டை விடும் சப்தம் கேட்கும். சுவாசக் குழலில் அடைப்பு யிருந்தால் கொட கொட வென்ற சப்தமும் கேட்கும். 'கட கட' வென்ற சப்தம் மரணக் குறியை காட்டும். அசுகரத்திலும் அசுகக் கிளைகளிலும் அடைப்பு ஏற்பட்டால் சன்ன வெடித்தல் சத்தமும், "உச் உச்" என்ற சத்தமும் கேட்கும். சிலர் சுவாசத்திற்கு தவிப்பு ஏற்படும். அலறி தவிப்பான்.

**இருமல்:**—இருமலின் குணத்தை கவனிக்கவேண்டும். கள வென்ற சப்தத்தோடு இருமல் வருகிறதா? இழுப்போடு இருமல் இருக்கிறதா? முன் சொன்னவை குறல் கம்மலிலும், வாத காசத்திலும் காணும். பின் சொன்னவை பித்தகாசத்திலும் காணும். க்ஷயநோயில் பொடி இருமல் ஆரம்ப நிலையில் காணும். பிறகு இழுப்போடு இருமல் காணும். சிலருக்கு இருமலுடன் கண் பிதுங்கி வாந்தி காணும். குறல் கம்மல் நோயில் இடைவிடாத தொண்டையில் எரிச்சலுடன் கரகரப்பான இருமல் தோன்றும்.

**உடல் வெப்பம்:**—உடல் வெப்பத்தை மெய் உணர்வால் பண்டைய காலத்தில் அறிந்தார்கள். இவ்வித தேர்வு சில சமயங்களில் ஏமாற்றத்தைத் தரும். ஆனால் தற்காலத்தில் தேக வெப்பத்தை உஷ்ணமானி என்ற கருவியினால் உணர்ந்தறியலாம்.

இவ்வாறாக உபயோகிக்கும் உஷ்ணமானி பழுதில்லாமல் செம்மையாக உஷ்ணத்தைக் குறிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

உஷ்ணமானியை நன்றாக நீண்ட காலம் தேகத்தோடு பொருத்தி வைக்கவேண்டும். சாதாரணமாக 1 வினாடியாகிலும் பொருத்தி வைத்தல் நல்லது.

வயது முதிர்ந்தவர்களுக்கு வாயிலாவது அக்கிளிலாவது உஷ்ண மானியை வைக்கவேண்டும் குழந்தைகளுக்கு ஆசனத்தில் வைப்பது நல்லது.

உஷ்ணமானியைக்கொண்டு சோதிக்கும் முன் அதனை குளிர்ந்த நீரில் அலம்பி பரிசோதிக்க வேண்டுமல்லாமலும் நன்ருக உதறி தேக வெப்பத்தை கவனிக்கவேண்டும். பரிசோதித்தபின் குளிர்ந்த நீரில் அலம்பவேண்டும்.

## தெ ந்தியையும் உணவு செறிப்பின் உறுப்புக்களையும் சோதனை செய்யு முறை

வாய்: நோயுற்ருனை நல்ல வெளிச்சத்தில் நிறுத்தி வாயை பரிசோதனை செய்யவேண்டும். சூரிய வெளிச்சம் கிடைக்கா விட்டால் தற்காலத்தில் "டார்ச் லைட்" ஒளியை வாயுட் புகுத்தி வாயை பரிசோதிக்கலாம்.

உதடு: உதட்டின் நிறத்தை கவனித்தல் வேண்டும். சில நோய்களில் உதட்டின் நிறம் மாறும். பாண்டு நோயில் வெளுத்திருக்கும். இருதய நோயில் நீல நிறம் காணும். உதட்டில் பக்குகள், பிளவுகள், புண்கள் இருக்கின்றனவா என்று கவனித்தல் வேண்டும். உதட்டை விரலினுல் கொஞ்சம் மெதுவாக இழுத்து உள் பாகத்தை பார்க்கவேண்டும். உதட்டின் உள் பாகத்தில் சிறு சிறு பருக்கள் காணும். அவைகள் கப்பித்த சுரத்தை குறிக்கும்.

பற்கள்: சொத்தை பற்கள் இருக்கின்றனவா என்று கவனித்தல்வேண்டும். மேலும் கீழுமாக சேர்ந்து 32 பற்கள் நல்ல நிலையில் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். கடைவாய் பற்களை முக்கியமாக கவனிக்கவேண்டும். அவைகள் உணவுகளை மென்று தின்பதற்கு காரணமா யிருக்கின்றன. இல்லையேல் அசிரணக் குறிகள் ஏற்படும். பற்களின் வேர்கள் ஈறுகளால் மூடப்படாமல் வெளி தெரிகிறதா என்று கவனிக்கவேண்டும். பறகளில் காரை படிந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

ஈறு: ஈறின் நிறத்தைப் பார்க்கவும், அச்சகத்தில் தொழில் புரிபவர்கள் ஈய உலோகத்தோடு பழகுகிறவர்களின் ஈறில் நீலக் கோடு காணும். இந்த நீலநிறக் கோட்டை பற்களின் காரையின் மீது ஓடும் மற்ரெரு நிறத்தின் வித்தியாசத்தை கூர்மையாக கவனித்தல் வேண்டும்.

சிற்சில நோய்களில் ஈறு உறுதியாய் இல்லாமல் பஞ்சைப் போல் இருக்கும். அழுத்திஞல் இரத்தம் கசியும். ஈறு ஊதி வீங்கி யிருக்கும். இவைகள் பல் அரணை நோயில் காணும். சில வேளை பற்களுக்கும் ஈறுக்கும் நடுவில் சீழ் காணும்.

சில நோயாளிகளின் வாய் நாற்றம் அடிக்கும். பற்களின் நோயினால் வாய் நாற்றம் மிகவும் காணும். பற்கள் நோயில்லாமலே வாய் நாற்றமும் மற்ற உடற் உருப்பு நோய்களிலும் காணும்.

**நாக்கு :** நாக்கை வெளியில் நீட்டச் செய்தல்வேண்டும். பாரிச வாயு நோயில் நாக்கு ஒரே பக்கம் இழுத்தாற்போல் காணும். நாக்கு துடிக்கும். இவைகளை எல்லாம் கவனிக்கவேண்டும்.

நாக்கின் மேற்பாகத்தை கவனித்தல் வேண்டும்.

(1) நிறம்—சிவப்பாக இருக்கிறதா, வெளுத்திருக்கிறதா? பட்டுத் துணியைப்போல் வழுவழுப்பாக இருக்கிறதா?

(2) நாக்கு உலர்ந்திருக்கிறதா? ஈரப் பசையோடிருக்கிறதா? நாக்கின் ஈரப்பசை உடலின் வெட்ப தட்ப நிலையை காட்டுகிறது. உலர்ந்து சுருங்கின நாக்கு உடலுக்கு நீர் உணவு அதிகம் தேவை என்று காண்பிக்கிறது. உலர்ந்து பழுந் செம்மையான நாக்கு நாட்பட்ட நோயைக் குறிக்கிறது அல்லது குடலின் வேக்காடுத் தன்மையைக் காட்டும்.

(3) நாக்கு மாவு—அதிகமா? குறைந்ததா? உலர்ந்த நாக்கில் சாதாரணமாக கொஞ்சம் மாவு படிந்திருக்கும். படுக்கையைவிட்டு எழுந்ததும் சுகதேகிகளுக்கும் நாக்கில் மாவு படிந்திருக்கும். மற்றும் புகையிலை புகை பிடிப்பவர்களுக்கும் வாயில சுவாசம் விடுபவர்களுக்கும் மாவு படிந்திருக்கும். இன்னும், உணவு செறிப்பு உறுப்புகளால் கோளாறு ஏற்பட்டாலும், சுர நோய்களிலும் நெடு நாட்பட்ட நோய்களிலும் மாவு நாக்கில் படிந்திருக்கும். வெற்றிலை பாக்கு உண்பவரிடம் மாவு தெரியாது

**நாக்கின் சொற சொறப்பு :** நாக்கின் மேல் பாகத்தின் உருவ அமைப்பில் சொற சொறப்பு உண்டு. அச் சொற சொறப்பு இல்லையே யாகில், பித்த வெப்பு நோயையும் அயச் சத்து உடலில் குறைந்ததென்றும், சங்கர கிராணி நோய் என்றும் உணவு செறிப்பு அவையங்களில் வேக்காடு என்றும் குறிக்கும். சில சமயம் மேல் தோல் உரியப்பட்டு வழுவழுப்பாக பழுப்பு செம்மை நிறத்தோடு சுருக்கங்களோடு காணும். இம்மாதிரியான குறி குணங்களை கொருக்கு நோயில் ஏற்படும் வழுவழுப்பையும் கவனித்து வித்தியாசம் தெரிந்துகொள்ளவேண்டும்.

(5) நாக்கின் அடிபாகத்தில் புண் காணும். அது நெடுநாட்பட்ட இருமலையோ கக்குவான் நோயைக் குறிக்கும்.

(தொடரும்)

# குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள். எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.)

## திருக்குறளும் பதினெண்கீழ்க் கணக்கும்

(முன் இதழ் தொடர்ச்சி)

"நுதல்வெயர்க்குமாறு கூடுவதில் உண்டாகின்ற
இனிமையை ஊடி இருந்து பெறுவோமோ''

என்பது குறட்பா கருத்துரை.

"ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு'' (ஊடல் உவகை)

திருவள்ளுவரின் தெளிவுரையைத் தழுவிய பாடல் ஒன்றை, ஐந்திணை ஐம்பதில் காண்கின்றோம்.

"குளிரும் பருவத்தே யாயினும் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதாம்—ஒளியிழாய்
ஊடி யிருப்பினும் ஊரன் நறுமேனி
கூடல் இனிதா மெனக்கு'' (மாறன் பொறையனார்)

திருக்குறளில் வருகின்ற தலைவன் பிரிந்த தலைவியை நினைப்பது போன்று நினைக்காமல் இருந்துவிடுகின்றான். எனவேதான் தலைவிக்குத் தும்மல் வருவதுபோ லிருந்துவராமல் அடங்கிவிடுகின்றது

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்'' (நினைத்தவர் புலம்பல்)

ஆனால் ஐந்திணை எழுபதில் வருகின்ற தலைவிக்கு அடுத்தடுத்து தும்மல் வருகின்றது.

"மன்ற முதுமரத் தாந்தை குரலியம்பக்
குன்றக நண்ணிக் குறும்பிறந்து—சென்றவர்
கன்னிய தன்மையர் போலும் அடுத்தடுத்
தொள்ளிய தும்மல் வரும்'' (மூவாதியார்)

பிரிவாற்றாமையால் வருந்துகின்ற தலைவியை இவண் சிறிது பார்ப்போம். 'என் இரு கண்களும் என் காதலன் வருகின்ற வழியைப் பார்த்துப் பார்த்து ஒளி இழந்து அழகு கெட்டுவிட்டன. என் விரல்களும் அவர் சென்ற நாட்களைக் குறித்துத் தொட்டுத் தொட்டுத் தேய்ந்துவிட்டன' என்று திருக்குறள் தலைவி மொழிகின்றாள்.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்" (அவர்வயின் விதும்பல்)

திணைமாலை நூற்றைம்பதில் வருகின்ற தலைவியின் நிலையும் அ.'.தே.

"பொன்வாளாற் காடில் கருவரை போர்த்தாலும்
என்வாளா என்றி இலங்கெயிற்றாய்—என்வாள்போல்
வாளிழந்த கண்டோன் வனப்பிழத்த மெல்விரலும்
நாளிழந்த எண்மிக்கு நைந்து" (கணிமேதாவியார்)

தலைவன் பொருள் ஈட்டும் பொருட்டு தலைவியை விட்டுப் பிரிகின்றான். பிரிவாற்றாமையின் காரணமாகத் தலைவி மெலிந்து விடுகின்றாள். எனவே அவளுடைய வளையல்கள் கழலுகின்றன. அந்த வளையல்களே அவள் காதலன் அவளை விட்டு நீங்கிவிட்டான் என்ற செய்தியை பலரும் அறிய பறைசாற்றுகின்றன. தான் பிரிவை உணருமுன்னர் வளையல்கள் உணர்ந்துவிட்டன என்று தலைவி விரைவுச் சுவையுடன் நவில்கின்றாள்.

"துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறைவா நின்ற வளை" (பிரிவாற்றாமை)

"தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை" (குறிப்பறிவுறுத்தல்)

"கொக்கார் கொடுங்கழிக் கூடுநீர்த் தண்சேர்ப்ப
னக்காங் கசதி தனியாடித்—தக்க
பொருகயற் கண்ணினாய் புல்லான் விடினே
இருகையும் நில்லா வளை"

என்பது கைந்நிலை. ஒழுக்கத்தின் உயர்வையும் இழுக்கத்தின் இழிவையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றார் குறளாசிரியர்.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

வள்ளுவனார் வாய்மொழியைப் பழமொழியும் பகர்கின்றது.

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு—நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு" (முன்றுறையரையனார்)

இதுகாறும்

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலை சொற்காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு''

ஆகிய நூல்களுடன் குறட்பாவைத் தனித்தனியாக ஒப்பிட்டுப் பார்த்தோம். உலகப் பேரறிஞர் திருவள்ளுவனார் பதினெண்கீழ்க் கணக்கைச் சேர்ந்த ஏனைய பதினேழு நூலாசிரியர்களுடன் முன்னோடியாக அமைந்துள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகின்றது. எனவேதான் சங்ககாலப் புலவராகிய பரணர் திருவள்ளுவனாரைப் பாராட்டு மிடத்து

"மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தன்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாம்அளந்தார் ஓர்ந்து''

என்று கூறியுள்ளார். திருவள்ளுவரின் தெளிந்த கருத்துக் கருவூலத்தை எடுத்துக் கையாளாத பாவலர்களும் நாவலர்களும் இடையா. வள்ளுவனாரின் ஒவ்வொரு கருத்துரையையும் இவ்வாழி சூழ் வையத்தில் வாழ்கின்ற மாந்தர்கள் அனைவரும் ஒருங்கே முழு மனத்துடன் ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்குப் பொதுமையாக அமைந்துள்ளது. சுருங்கக் கூறுமிடத்து குறட்பா சாதி, சமயம், நாடு, காலம், மொழி, மதம் ஆகியவற்றை எல்லாம் ஒருங்கே கடந்து இன்றைய நாளில் உலகிற்கே பொதுமையாக விளங்குகின்றது. எனவேதான் வள்ளுவர் நூலைத் 'தமிழ்மறை' என்று இயம்புவதோடு அமையாது 'பொதுமறை' எனவும் அறிஞர்கள் வழங்கலானார்கள். ஆகவே தான் கல்லாடர்

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி''

என்று கூறியுள்ளார்.

## உயிர் இன்பம்

இயற்கையான பசுஞ்சோலையும் அதன் வளமான வனப்பும் கண்ணிற்கு இன்பம் பயக்கின்றன. அங்கிருந்த வண்ணமே குழலோசையையும் யாழிசையையும் கேட்குங்கால செவிக்கு இன்பம் பயக்கின்றது. முக்கனி கமழுஞ் சோலையிலுள்ள நல்ல மாங்கனி

ஒன்றைப் பறித்து உண்ணுமிடத்து நாவிற்கு இன்பம் அளிக்கின்றது.

"பொங்கரின் நுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கொடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று"

வீசுகின்ற தென்றலை நுகரும்போது மூக்கிற்கு இன்பம் பயக்கின்றது. மழலை மொழி மாருத நம் மக்களின் மெய்யைத் தீண்டுங் காலை உடற்கு இன்பம் பயக்கின்றது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலனுக்கு மட்டும் இன்பம் அளிக்கின்றது. இவ்வைந்தும் ஒன்ருகச் சேர்ந்தாலும் ஐம்புலன்களுக்கு இன்பம் பயக்குமேதவிர உயிர்க்கு இன்பம் அளிக்காது. ஐம்புலன்களுக் குரித்தான இன்பங்கள் அத்தனையும் அளிக்கவல்ல அரிவையின் தழுவுதல் உயிர்க்கே இன்பம் அளிக்கின்றது.

"உறுதோறு உயிர்தளிப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்" (புணர்ச்சி மகிழ்தல்)

"வாழ்தல் உயிர்க்கன்னன் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து" (காதற் சிறப்புரைத்தல்)

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் இனிமை உயிருடன் கலந்து இன்பம் பயக்கின்றது என்று இராமலிங்க சுவாமிகள் இயம்புகிருர்.

"ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே".

## நன்றியும் செய்ந் நன்றியும்

சாதாரண நிலையில் ஒருவன் மற்ருெருவனுக்குச் செய்யும் உதவியே நன்றி எனப்படும். இடுக்கண் ஒன்று உற்ற காலை உடனே வந்து உதவிபுரிவது செய்ந்நன்றி எனப்படும். 'செய்' என்ற பதத்திற்கு அல்லலுற்ற காலை ஒருவன் உடனே செய்த' என்ற சிறப்புப் பொருள் கொளினும் அமையா நிற்கும். இதுவே காலத்திணுற் செய்த நன்றி எனப்படும் ஒருவன் எந்த நன்றியைக் கொன்ருலும் எந்த அறத்தை அழித்தாலும் அவனுக்கு உய்யும் வழியுண்டாம்; ஆனுல் செய்ந்நன்றியைப் பொசசாந்து விடுவாஞயின் அவன் அழிவது உறுதி. வள்ளுவஞர் செய்ந்நன்றி அறிதலுக்கு வரையறுத்த இலக்கணத்திற்குப் பாரதம் ஓர் இலக்கியமாகத் திகழ்கின்றது. நிரை மீட்சிக்காக நடந்த போரில் துரோணர் அர்ச்சுனனை எதிர்க்க, விசயன் அவரைக் காரணம் கேட்க துரோணர் பகர்கின்ற மாற்றம் இதுதான். (தொடரும்)

# சௌந்தரிய லகரி

## முதல் பாகம்

## ஆனந்த லகரி

(சித்த வைத்தியர், எச். பி. முத்து கிருஷ்ணன்.] நெற்குப்பை)

(முன் இதழ் தொடர்ச்சி)

### பூஜையின் பெருமை

*மாயன் வணங்கி உன்மால் வடிவங் கொள*
*வாடும் அரன் துயர் போதாதோ?*
*தூய மதன் தொழ ஆண்வடிவம் புணர்*
*தோகை கண் வண்டு அயில் தேனே போல்*
*மேய வழங்கும் உருபமது என் சொல*
*மேலிது கண்டவர் வாழ்வாரோ?*
*நீ அதிரஞ்சகி மோகன வஞ்சகி*
*நீ செய்வது ஒன்றல மாதாவே!!*

தாயே! திருமாலானவர் உன்னை பூசித்து வணங்கியதால், உனது சௌந்தரியமான பெண் வடிவைக்கொள்ள, அப்பேரழகி யின் மயக்கத்தில் மயங்கி நின்ற பரமசிவனும், அடைந்த துயரம் போதாதா? தூய்மையுடைய, மன்மதனும், உன்னைப் பூசித்துத் தொழுது, அவனது சரீரத்துடன், புணரும் இரதியின் கண்களான வண்டுகள் பருகும் வண்ணம், அம்மன்மதனுக்கு நீ அருளிய பேரழ கின் பெருமையை எவ்வாறு உரைப்பேன்?

பரமசிவனும் இரதியும் இவ்வாருயினர் என்ருல் ஏனையோர் கள், அப்பேரழகைக் கண்டு மயங்காது உயிர்வாழ முடியுமா? ஆதலால், நீ எல்லோர்க்கும் பிரியத்தை உண்டாக்குபவள். மோக னத்தால் வஞ்சிக்கின்றவள். மாதாவே!! நீ செய்வது ஒரு செய லல்ல. எத்தனை எத்தனையோ!!!

(குறிப்பு) இதனுல் உன்னைப் பூசிப்பவர்கள் அடைய முடியாத வரங்களை எல்லாம் அடைய முடியும் என்பது பெற்றும்.

N B: கரும்புவில்லும், பூங்கணைகளும். தென்றல் தேரும். திங்கள் குடையும், பூஞ்சோலையாகிய பாசறையும், உடையவ னுதலின், "தூய மதன்" எனப்படுகின்றனன்.

முன்னம், பரமசிவனுல் வரம் பெற்ற ஓர் ரிஷி அப்பரமசிவ னுக்கு தீங்கு விளைவிக்கச் சென்றபோது அவ்விருஷியை, திருமால், தேவியின் வடிவு எடுத்து அவ்விருஷியை, வஞ்சித்துக் கொன்ருர். அதனையறிந்து சிவனும், திருமாலை மீண்டும் அத்தேவியின் (பெண் ணின்) வடிவம் காட்டும்படி கேட்க, மீண்டும் திருமால் தேவியின்

வடிவு கொண்டபோது, அப்பேரழகின் மயக்கத்தில், பரமனும் விரகத்தை அடைந்தனன்'' என்ற பழம் கதையால் "வாடும் அரன் துயர் போதாதோ'' என்று கூறப்பட்டது.

**கடைக்கண் பார்வை**

தொடு கரச் சிலை தொடப் பொரு மலர்,
சுரும்பு நாண், இடுவது ஐந்து கோல்,
அடு படைத் தலைவனர் வசந்தம், அலை
தென்றல் தேர், உருவம் அருவம் ஆ(ம்)
முடுகு கொற்ற மதன், ஒருவன், இப்புவனம்
முற்றும் வெற்றிகொள, முடிவு இலா
நெடு மலர்க் கண் அருள், சிறிது அளித்தனை கொல்
நீலியே! கர கபாலியே!!

நீல நிறத்தை உடையவளே! கரத்தில் கபாலத்தை ஏந்திய, அம்பிகையே!!

அம்பை விடுக்க, கையில் ஏந்திய வில்லானது கையினுல் தொடுதற்கும் பொருத மலரினுல் சுற்றப்பெற்ற (கரும்பு) வில். அதற்கு வண்டுகளே நாண். எய்வதும் ஐந்து அம்புகளே (மலர் பாணங்களே) படைத்தலைவன் வசந்த காலம் போர் செய்ய ஏறி வரும் தேரோ, மெதுவாய் இயங்குகின்ற தென்றல் காற்று, உருவமோ, இல்லை; அருவம். இத்தகு அமைப்புகளைப் பெற்று, யாவரையும் முடுகுகின்ற வீரத்தைப் பொருந்திய மன்மதனும் ஒருவனுகவே, ஒருவிதமான துணையுமின்றி, இப்புவன முழுவதும், வெற்றி கொள்ளும்படிக்கு, உனது நெடிய மலர் போன்ற கண்களின் அருளை சிறிது அளித்தனையோ? கடைக் கண்களால் அருளைப் பொலிவித்தனையோ? சொல்லுவாயாக!!

(குறிப்பு) இதனுல் நின்னருள் இன்றி ஒருவருக்கும் வலிமை இல்லை என்பது பெற்றும். (தொடரும்)

---

# வேண்டுகோள்

உங்களிடம் அரிய, அச்சில் வெளி வராத வைத்திய நூல்களிருந்தால், பிரதி செய்து அனுப்புங்கள். பிரசுரிக்கப்படும்.

# நந்தி "தேவர் மாலை"

(சித்த வைத்தியர் கெ. இரமணன், அன்னியூர்)

ஞாலந் தழைக்க நவிலும் நாதன் நந்தி
நாயகனை நம்பி நாமுய் வோம் நல்ல
சீலத் தவப்புதல்வன் சுந்திரா னந்தன்
சுகம் செப்பும் மொழியாளன் சித்தன் !!

நந்தி நாதன் நவிலும் நால்வகைச் சுருதியும்
நாடியும் நாதமும் நற்போ தமும் ஞானமும்
சிந்தித்துய்ய செயல்பட சேவை செய்யும்
சித்தன் சுந்திரானந்தன் சேவை செழித்தோங்கவே !!

மருத்துவம், மகத்துவம், மதத்ததுவம் மடியவே,
மண்ணின் மிசை மனதடக்கி மாவெளி காணவே
ஒருத்தரும் ஒப்பிலா உமையாம் உள்ளொளி கண்டு
ஓங்கு புகழ் ஓமெழுத்தில் திகழ்ந்துய்வாம் !!

தொல்லைப் பிணியும் துயரும் துடைப்பான் 'நந்தி'
தொல்லைப் பிறவியில் வேறுதுணை உண்டோ சிந்தி !!

பரமனின் பாதசேவகன் பக்தரட்சகன்
பசுபதி பாச விளக்கணம் பகர்ந்து
தரணியில் தனி நிகரிலா தரு தழை எனவும்
தாதுப்பு சாத்திரமும் பகர்ந்தவன் நந்தி !!

மாயப் பிறப்பறுக்கும் மாயா வகை கூட்டும் தன்
மாயமாம் சின்மய சிவ தேசிகனைச் சேர்க்கும்
ஓயாப் புகழும் ஓமெழுத்தின் உள்ளொளியும் ஒன்றி
உலகனைத்தும் ஒலிக்கும் ஒலியான நந்தி வாழியவே !!

முந்தியும் பின்னும் நடுவும் முப்பாழுமாய்க் கண்
மூடிக்காணு முழு முதற் பொருளை மூலத்தில் முனைந்து
சிந்தை தெளிந்து சிவோக வென்றிருப்பார்க்கு நந்தியின்
சிவ சிவ சிவ என செப்பும் மொழியதாமே !!

நாட்டு மருந்ததனை நாட்டு மக்கள் நலம் பெறவே
நாடியுண்ண நன்மணி, கழஞ்சு, திரிகடிகையென
கூட்டுறவால் கூடிய அவிழ்த முண்ண குணம் காண
கூட்டமாய் ஓட்டமாய் நாடினர்க்கு குரு "நந்தியே" !!

# குங்குமப்பூ

(சித்த வைத்தியர் அ. மாணிக்கவாசகம், சென்னை)

*விந்து நட்டந் தாகமண்டம் மேகசலஞ் சூலைகப*
*முந்து சுரம் பித்தங்கா லுச்சிவலி—முந்து கண்ணிற்*
*றங்குமப்பூ வோடுறுநோய் சர்த்தியிவை நீங்கவென்றூற்*
*குங்குமப்பூ வோரிதழைக் கொள்.*

*குங்குமப்பூ வைக்கண்டாற் கூறுகொண்ட பீனிசநோய்*
*தங்கு செவித் தோடஞ் சலதோடம்—பொங்கு*
*மதுர தொடந் தொலையு மாதர் கருப்ப*
*வுதிர தோடங்களறு மோர்.* (தேரையர்)

குங்குமப்பூவினால் சிரண சுக்கிலம், நாவரட்சி, குடல் விருத்தி மேகநீர், கீல்பிடிப்பு, கபாதிக்கம், அதிருட்சை, பயித்தியம், வகுண வாதம், மண்டைவலி, கருவிழியிற் படருகின்ற பூ, கண்ணோய், வாந்தி, சலபீனிசம். கர்ண உள் மந்தம், நீரேற்றம், வாயினிப்பு, பிரசவமலினம் இவை தீரும்.

இது சந்தோஷத்தை உண்டாக்கிப் புலன்களைக் காக்கும். வாயுவைக் கண்டிக்கும். கெட்டுப்போன வாத சத்துக்களைச் சுத்தப் படுத்தும், தாது விருத்தியை உண்டாக்கும், ஆத்தும சக்தியை அதிகரிக்கச் செய்யும். சுவாசம், ஈரல், குடல் முதலிய உறுப்புகளுக்கு பலம் கொடுக்கும். மருந்துகளின் குணத்தை விசேஷப்படுத்தும். கருப்பம் வெளிப்படாமல் உபத்திரவப் படுங்காலத்தில் ஒரு வராகனிடைக் குங்குமப்பூவை சோம்பு கஷாயத்தில் கரைத்துக் கொடுக்க உடனே வெளிப்படும். பிள்ளை பிறந்தபின் குங்குமப் பூவை மூன்று குன்றுமணி எடையாக மூன்று வேளை கொடுக்க உதிரச் சிக்கலறும். இரண்டு விராகனிடை குங்குமப்பூவை ஜலத்தில் அறைத்து உருண்டை செய்து உள்ளுக்குக் கொடுக்க மறித்த பிண்டம் உடனே வெளிப்படும். தேனில் உறைத்துப் பெண் குறி. பவன வாய், காது இவைகளில் உண்டாகும் நோய் களுக்கு பூச சீக்கிரத்தில் குணமுண்டாகும். முலைப்பாலில் உறைத்து கண்களில் வார்த்துவர கண்ணீரொழுக்கு முதலிய கண்ணைப்பற்றிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். உதிர பீனிசத்தை மாற்றும். தீராத ஒற்றை தலைவலிக்கு அபினி, விளாம்பிசின், பனைவெல்லம் இவைகளுடன் சேர்த்தரைத்துக் கன்னப்பொறியிற் காகிதத்தில் தடவி ஒட்டிவிட்டால் வலி நீங்கும். இதன் தைலத்துக்கும் இதே குணம் உண்டு.

இது சிறிய இலைகளுடன் ஆரஞ்சிப்பழ நிறமாய் இருக்கும். இதன் சாயம் சலத்திலும் சாராயத்திலும் இறங்கும். ஒருவிதமான வாசனையாய்க் கொஞ்சம் இனிப்பாய்க் காரமாய் கசந்துகொண்டு

இருக்கும். எச்சிலை மஞ்சளாக்கிவிடும். இதற்கு கொஞ்சம் உஷ்ணப்படுத்தும் குணம் உண்டு இதை சூதகக்கட்டு வலி இவைகளுக்குக் கொடுக்கலாம் ஒரு கிராம் குங்குமப்பூவை ஒரு பயிண்ட் சலத்தில் போட்டு வெந்நீர் கஷாயமாக்கி மந்தாகினிக்குக் கொடுக்கலாம். பத்து அரிசி எடை முதல் 30 அரிசி எடைவரையில் வலிகளுக்குக் கொடுக்கலாம், பரிமள லேகியத்தில் சேருகிற மருந்துகளில் இதுவும் ஒன்று.


திருச்சி சமயபுரம்

# நேசர் வைத்தியசாலையின்

## பரம்பரை அனுபவ மருந்துகள்

துப்பாக்கி மெழுகு :

தங்கலிங்க மெழுகு :

தேவாமிர்தம் :

பிண்டத்தைலம் :

சஞ்சீவித் தைலம் :

உபயோகியுங்கள்.

**P. L. பெர்னன்டஸ்**

சமயபுரம் P.O.

திருச்சிராப்பள்ளி.

# கைமுறை அனுபவ வைத்தியம்

சில கைகண்ட அனுபவ முறைகள்

(சித்த வைத்தியர் ப.பன்சாமின், லாலுகாபுரம், திருநெல்வேலி)

(முன் இதழ் தொடர்ச்சி)

## 1. பெரும்பாட்டிற்கு மிளகு லேகியம்

*போஸ்தக்காய், கர்க்கடகசிங்கி - 1 பலம், மராட்டி மொக்கு — 1 கழஞ்சு இவைகளைச் சுத்தி செய்து, பின்னர் நன்றாய் பொடி செய்து, கருப்புக் கட்டிப் பாகில் கொட்டிக் கிண்டி, தேனையும் கலந்து கிண்டி, மெழுகு பதமானவுடன் சட்டியை இறக்கி வைத்துக்கொள்ளவேண்டும்.*

**சாப்பிடும் அளவு:** *காலை மாலை தினமும் பாக்களவு சாப்பிட வேண்டும், இவ்வாறு 5 நாட்கள் உண்ணவேண்டும்.*

**தீரும் வியாதிகள் :** *பெண்களின் உதிரப் பாய்ச்சல், பெரும்பாடு முதலியன தீரும்.*

**பத்தியம் :** *வறுத்த உப்புக் கூட்டவும், மிளகு, துவரை சேர்த்துக்கொள்ளலாம். வெந்நீர் அருந்தவும்,*

## 2. திரிகடுகு லேகியம்

*திரிகடுகு பலம் 1, சீரகம், கிராம்பு, ஏலம் ½ பலம் இவைகளைச் சுத்திசெய்து சூரணித்து, பனைவெல்லத்தில் 5 பலம் எடுத்து அதை பாகுபோல் கிண்டி, சூரணத்தையும் கலந்து கிண்டி தேன் சேர்த்து லேகியபதமாய் கிண்டி, இறக்கி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.*

**சாப்பிடும் அளவு :** *தினம் காலை மாலை கொட்டைப்பாக்களவு உண்ணவேண்டும். இவ்வாறு 20 நாள் சாப்பிடவேண்டும்.*

**தீரும் வியாதிகள் :** *வாதமொடு வாய்வும், உஷ்ணபித்தம், வயிற்றுவலி, கடுப்பு உளைவு, எரிச்சல், பேதி, அக்கினிமந்தம், வாந்தி, தீராத அஸ்திசுரம், அஸ்திவெட்டை, பொருமல் வாயுவுக் கிராணி முதலியன. மேலும் இந்த லேகியத்துடன் அயச்செந்தூரம் பண எடை சேர்த்து உண்ண கனமான வாயுவெல்லாம் தீரும்.*

## 3. சுக்குச் சூரணம்

*சுக்கை சூரணம் பண்ணி அதனளவு வெல்லம் சேர்த்து நன்றாய்க் கலந்து விரவிக்கொள்ளவும்.*

**அளவு :** *தினம் காலை மாலை தின்று வரவும். இவ்வாறு 7 நாட்கள் சாப்பிட்டு வரவும்.*

**தீரும் நோய்கள்:** கனமான வாய்வுத் தீரும். பசிதீவனம் உண்டாகும்.

## 4. திப்பிலி, மிளகுச் சூரணம்

திப்பிலியைச் சூரணம் செய்து, தேனில் குழைத்துத் தின்றால் புகைச்சல் இருமல் தீரும்.

மிளகை சூரணம் செய்து, பசுநெய்யிற் குழைத்து, சீனி சேர்த்து மூன்று நாள் காலை மாலை சாப்பிட்டுவந்தால் சளி இருமல் தீரும்.

## 5. திரிகடுகுச் சூரணம்

திரிகடுகுச் சூரணத்தை தின்றால் மந்தமுடன் கழிச்சல் தீரும். தேனில் குழைத்துச் சாப்பிட்டால் சந்நிசீதளம் போம். பனை வெல்லத்தில் கலந்து சாப்பிட்டால் வயிற்றுநோய் தீரும்.

## 6. இஞ்சிச் சூரணம்

இஞ்சிப் பலம் 10. இதை எடுத்து தோலைச் சீவி சிறு வில்லை களாக நறுக்கிப் பின்னர், பசு நெய்யில் பொன் வறுப்பாய் வறுத்து, பொடி செய்து வைத்துக்கொண்டு, பின்னர், ஏலம், திரிகடுகு, கிராம்பு, ஓமம், வாலுழுவை அரிசி, சாதிக்காய், யானைத்திப்பிலி, சீரகம், அதிமதுரம், குரோசாணி ஓமம், அமுக்கரா, கசகசா, லவங்கப் பத்திரி, கொத்தமல்லி, பேரீச்சம், முந்திரிப்பழம், வகைக்கு ¼ பலம் எடுத்து இளம் வறுப்பாய் வறுத்து சூரணம் செய்து 10 பலம் சீனிக் கூட்டி மூன்று பொருள்களையும் ஒன்றாய் விரவிக்கொள்ள வேண்டும்.

**அளவு:** தினமும் காலையும் மாலையும் வெருகடி அளவு ஒரு மண்டலம் உண்டு வரவும்.

**தீரும் நோய்கள்:** மந்தம், அக்கினிமந்தம், உஷ்ணவாய்வு பித்தம், பித்தவாயு முதலியன தீரும்.

## 7. மந்தவாய்வுக்குச் சூரணம்

சீரகம், ஏலம், பச்சைக் கற்பூரம் சமனளவு எடுத்துச் சூர ணித்து, அதனளவு சீனி கூட்டி வெருகடி சாப்பிடவும்.

**தீரும் நோய்கள்;** பித்தம், ரத்த பித்தம், வெறிபித்தம், அரோ சிகம், வாந்தி முதலியன தீரும், பத்தியமில்லை.

**கால அளவு:** 20 நாட்கள் சாப்பிடவும்.

## 8. பறங்கிப்பட்டைச் சூரணம்

பறங்கிப்பட்டை, அமுக்கரா, செங்கந்தாரி, வேம்பாடைப் பட்டை, திப்பிலி, சித்திரமூலம் சமனிடை எடுத்து ஆவின்பால் பிட்டு வைத்து, பசு நெய்யில் வெருகடி அளவு உண்டால் மூலைப் புண் தீரும்.

## 9. வெள்ளைக்குச் சூரணம்

சந்தனம், அகிற்கட்டை, ஏலம், லவங்கப்பட்டை, கிராம்பு, சோம்பு, அதிமதுரம், கார்போகவித்து, வெப்பாலை, தேற்றான்வித்து அருகன்வேர், சிற்றாமுட்டிவேர் வகைக்கு ½ பலம், இவைகளைச் சுத்திசெய்து வெயிலில் உலர்த்தி, பின் சூரணம் செய்து சூரணத்திற்கு சமன் எடை கற்கண்டு சேர்த்து ஒரு சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :** தினமும் காலையும் மாலையும் சூரணத்தில் ஒரு வெருகடி எடுத்து பசு வெண்ணெயில் மத்தித்து ஒரு மண்டலம் கொள்ளவேண்டும்.

**தீரும் நோய்கள் :** மடைதிறந்து ஓடுகிற வெள்ளை தீரும் நீரெரிப்பும் தீரும்.

**பத்தியம் :** காரமான பொருள்களை நீக்கவும்.

## 10. கருஞ்சூரைச் சூரணம்

கருஞ்சூரை, சித்திரமூலம், வெள்ளறுகு, மிளகரணை, மிளகு சிறுகுறிஞ்சா, ஆகாசக் கருடன்கிழங்கு அத்திவேர்பட்டை, கருவேலம் ஆகிய ஒன்பது சரக்குகளையும் சரி எடை எடுத்து சுத்தி செய்து சூரணித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

**அளவு :** தினமும் காலை மாலை வெருகடி அளவு எடுத்து பசு நெய்யில் மத்தித்துச் சாப்பிடவும்.

**தீரும் நோய்கள் :** விஷகடி, குஷ்டரோகம், கருங்கருப்பான், சிரந்தி, சூலை, புண்கள் தீரும்.

**பத்தியம் :** வறுத்த உப்பு, துவரை சேர்த்துக்கொள்ளவும்.

## 11. காட்டுக்கருணைச் சூரணம்

பேய்கருணை—பதினாறு கழஞ்சு, சுக்கு—நான்கு கழஞ்சு, கொடிவேலி—இரண்டு கழஞ்சு, மிளகு—இரண்டு கழஞ்சு இவைகளைச் சூரணம் செய்து வைத்துக்கொள்ளவும்.

**அளவு :** மூன்று சுண்டைக்காய் அளவு எடுத்து தினமும் காலை மாலை எண்ணெயில் மத்தித்து உண்ணவேண்டும். இப்படி 7 நாள் சாப்பிடவேண்டும்.

**தீரும் வியாதிகள் :** மூலமுளை, மூலரோகம், குணமாகும்.

**பத்தியம் :** புளி சேர்க்கக் கூடாது.

(தொடரும்)

# சித்தர் நவலோக கல்பம்

REGD

இது ஆஸ்துமா, யானைக்கால், வெண்குஷ்டம், குழிப்புண் ரணம், பெருத்த சரீரம் சிறுக்க, மற்றும் பல வியாதிகளைத் தீர்க்க உதவுகிறது. இந்த

## சித்தர் நவலோக கல்பம்

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது

நாங்கள் சித்த சாஸ்திரப்படி பஸ்பம், செந்தூரம், சுண்ணம், மெழுகு, கட்டுவகை, எண்ணை. தைலம், லேகியம், சூரணம் முதலியன தயாரிக்கிறோம். ஆகவே தாங்கள் ஒருமுறை எங்கள் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யுங்கள்.

கிளை வைத்தியசாலை :

G. S. T. ரோடு, 39-வது மைல், பாலாற்றங்கரை,

மாமண்டூர், வடபாதி. (செங்கற்பட்டு ஜில்லா)

மேற்கண்ட கிளை வைத்தியசாலையில்

பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

மற்ற நாட்களில் சென்னையில்

காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையில் நாமே வியாதியஸ்தர்களை கவனிக்கின்றோம்.

சித்த வைத்தியர் :

சாது வீ. நாராயணசாமி பிள்ளை,

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு,

திருவல்லிக்கேணி :: சென்னை-5

தொலைபேசி எண் : 84786



Printer : R. Ayyalu Naidu, Valluvar Achagam, 17-A Padavattamman Koil St. Kosapet, Madras-12.

Editor & Publisher : His Holiness, Sri-La-Sri Sunderananda Sarasvathi, No. 9, Gajapathi Naidu St., Shenoynagar, Madras-30.

# எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமு மாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னு வது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பய னுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந் திக்க விரும்பினுலும சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினுலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத் தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், முட்டி, முதுகு, இடுப்புவலி, நரம் புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்து களை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம குறை யும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. நெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 50.00

2. நெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 30.00

விபரங்களுக்கு :

தலைமை ஆபீஸ் :

## சிவராஜ்
## சித்த வைத்திய சாலை

சிவதாபுரம் போஸ்டு

சேலம் 2

# தி இந்தியன் மெடிகல் பிராக்டீஷனர்ஸ் கூட்டுறவு பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185.

அடையாறு, மதராஸ்-20.

தபால் பெட்டி 907. போன் 71013, 71014

தலைவர் : Dr. V. நாராயணசாமி H.P.I.M.,

உபதலைவர் : டாக்டர் க. சு. உத்தமராயன் எச். பி. ஐ. எம்.

**அங்கத்தினராகும் வாய்ப்பு :**

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றும் பட்டம் பெற்ற வைத்தியர்களும்.
2. பஞ்சாயத்து முனிஸிபாலிடி மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும் கழகங்களும்.
3. பிரதம கூட்டுறவு சங்கங்களும் மத்திய கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி ஆயுர் வேத, சித்த, யூனானி மருந்துகளைத் தயார் செய்கிறோம்.

எங்களுடைய மருந்துகளைப் பதிவு செய்யப்பட்ட மருந்து ஷாப்புகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**எமது புதிய வெளியீடுகள் :**


| | | | |
|---|---|---|---|
| 1. | வைத்திய யோகரத்னாவளி | (ஆங்கிலம்) | ரூ. 6—50 |
| 2. | ,, தமிழ் ரூ. 6—00 | (தெலுங்கு) | ரூ. 6—00 |
| 3. | சித்த பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. 3—00 |
| 4. | ,, தமிழ் ரூ. 3—00 | (தெலுங்கு) | ரூ. 3—00 |
| 5. | யூனானி பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. 3—00 |
| 6. | ,, தமிழ் ரூ. 3—00 | (தெலுங்கு) | ரூ. 3—00 |
| 7. | ரசரத்ன சமுச்சயம் | (தெலுங்கு) | ரூ. 10—5 |

தபால் செலவு தனி

**கிளைக் காரியாலயங்கள் :**


1. 20-320 பொட்டி பொட்லவாரி வீதி, கவர்னர்பேட்டை விஜயவாடா (ஆந்திர ராஜ்யம்).
2. 264, காட்டன்பேட்டை பெங்களூர்-2 (மைசூர் ராஜ்யம்)
3. நகர விற்பனை நிலையம் :—4-186 மவுண்ட்ரோட், சென்னை-2.
4. கிளை விற்பனை நிலையம்:—வைஸ்ய ஹாஸ்டல், கச்சிகூடா ஸ்டேஷன் ரோட், ஐதராபாத்.
5. 48, தெற்கு மாசி வீதி, மதுரை-1

Y. கொண்டல் ராவ்,
காரியதரிசி.



பச்சிளங் குழந்தை தன்னை

# தொட்டாலும் கை மணக்கும்



பைந் தமிழ்க் கவிதை தன்னை

# சொன்னாலும் வாய் மணக்கும்



தாய் நாட்டின் சிறப்பு தனை

# கேட்டாலும் செவி மணக்கும்



ரத்தினம் பொடிதனை

# நினைத்தாலும் உளம் மணக்கும்

# T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151, மதராஸ்-21.

S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே.